# இடர்கால வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

## கல்விப் பொதுத்தராதர உயர்தரம் - தமிழ் (72)

தரம் - 12 ஆசிரியை : திருமதி.R.ரேணுகா தேவி

வாரம் - 02 இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்

தவணை - 01

---

தேர்ச்சி : 7.0 மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியை செம்மையாக கையாள்வார்.

தேர்ச்சி மட்டம் : 7.1 எழுத்துக்களின் வகைகளையும் தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

விடயம் : எழுத்து

**சரியான விடையை தெரிவு செய்க.**

1) தனியன் என அழைக்கப்படும் எழுத்து யாது?
   1. ஆய்த எழுத்து
   2. உயிர் எழுத்து
   3. மெய்யெழுத்து
   4. முதலெழுத்து
   5. கூட்டெழுத்து

2) ஔவையார் என்ற சொல்லுக்குரிய மாத்திரை பெறுமானம்?
   1. 5 ½
   2. 6
   3. 4
   4. 3 ½
   5. 4 ½

3) தமிழிலுள்ள சந்தியக்கிரக எழுத்துக்கள் எவை?
   1. ஐ, இ 3. ஔ, ஓ 5. ஒ, ஓ
   2. ஔ, உ 4. ஐ, ஔ

4) உயிர் எழுத்துக்களை உச்சரிக்கும் போது உயிராக வரும் எழுத்து?

1. ஆ  2. அ  3. ஈ  4. எ  5. ஊ

5) தற்கால வழக்கில் அருகி காணப்படும் சார்பெழுத்து?

1. உயிர்மெய்யெழுத்து
2. குற்றியலுகரம்
3. குற்றியலிகரம்
4. உயிரளபெடை
5. ஆய்தம்

6) பின்வருவனவற்றுள் அரையுயிர்

1. ஆ  2. ச்  3. ஐ  4. ய்  5. க்

7) தமிழில் முதலெழுத்துக்கள் எனப்படுபவை?

1. மெய்யெழுத்துக்கள்
2. உயிரெழுத்துக்கள்
3. உயிர்மெய் எழுத்துக்கள் + மெய்யெழுத்துக்கள்
4. சார்பெழுத்துக்கள் + உயிரெழுத்துக்கள்
5. உயிரெழுத்துக்கள் + மெய்யெழுத்துக்கள்

8) நுனிநா பல்லோடு பொருந்த உச்சரிக்கப்படும் சொல்

1. வல்லவர்  3. யான்  5. ஆடு
2. பொந்து  4. காய்

9) பின்வருவனவற்றுள் கடையண்ண வெடிப்பொலி

1. க்  2. ற்  3. ச்  4. ப்  5. ட்

10) பின்வருவனவற்றுள் "ககரம்" வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. பற்கள்  3. பக்கம்  5. கடன்
2. முட்கள்  4. சங்கம்

11) பின்வருவனவற்றுள் "பகரம்" வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. பட்டு  3. பக்கம்  5. சாபம்
2. பந்து  4. அப்பம்

12) பின்வருவனவற்றுள் ஈரிதழ் ஒலிகள்

1. க், த்  3. ம், ப்  5. ங், ஞ்
2. ய், வ்  4. ப், ந்